சார்பு நீதிமன்றம், விருதுநகர்

O.S.No:79/2020 Date: 11.10.2023.

வாதி தரப்பு சாட்சி(Pw1) வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144வது பிரிவின் படி திரு.M.ஆறுமுகம், கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சீனிவாசகன் | சாதி | : -- |
| த/பெ | : சந்திரன் | சமயம் | : -- |
| கிராமம் | : தவசிலிங்கபுரம் | தொழில் | : |
| தாலுகா | : விருதுநகர் | வயது | : 48 |

முதல் விசாரணை-

நான் இவ்வழக்கில் வாதி. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை என் சாட்சியத்தின் ஒரு பகுதியாக வாசித்துக்கொள்ள வேண்டுகிறேன். 18.10.2019ம் தேதிய வாதிகள் பெயரில் தபசில் சொத்துக்களுக்குரிய பட்டா 10(1) நகல் கணினி நகல் **வா.சா.ஆ.1.** 06.03.2020ம் தேதிய தபசில் சொத்திற்கான வாதிகள் தகப்பனார் (லேட்). சந்திரன் பெயரிலான தீர்வை ரசீதுகள் (எண்ணம் -2) அசல் **வா.சா.ஆ.2.** 18.10.2019ம் தேதிய தபசில் சொத்திற்கான வாதிகள் பெயரிலான தீர்வை ரசீதுகள் (எண்ணம் -2) அசல் **வா.சா.ஆ.3.** 21.01.2020ம் தேதிய தபசில் சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் கணினி நகல் **வா.சா.ஆ.4.** தாவா சொத்தினை பொறுத்து வாதிகளுக்கு தாயார் வெங்கட்டம்மாள் சகோதரி ஜெயலட்சுமி எழுதிக்கொடுத்த உரிமை விடுப்பு ஆவணம் அசல் **வா.சா.ஆ.5.** 24.01.2020ம் தேதிய தாவா சொத்திற்கான 1ம் பிரதிவாதி மோசடியாக ஏற்படுத்திய கிரைய ஆவணம் (ஆவணம் 1234/1985) சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6.** 24.01.2020ம் தேதிய 2ம் பிரதிவாதி 1ம்

பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் (ஆவண எண். 6216/2019) சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7.** 03.07.2020ம் தேதிய தபசில் சொத்தினை 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் (ஆவண எண். 931/2020) சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.8.** 24.02.2020ம் தேதிய வாதிகள் தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு (ரசீதுடன் ) அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு உண்மை நகல் **வா.சா.ஆ.9.** 26.02.2020ம் தேதிய 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.10.** 26.02.2020ம் தேதிய 2ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்ட ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.11.** 26.02.2020ம் தேதிய 4ம் பிரதிவாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்ட ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.12.** 01.07.2020ம் தேதிய 1ம் வாதி 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் மீது ஆமத்தூர் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனு உண்மை நகல் **வா.சா.ஆ.13.** 15.07.2020ம் தேதிய தாவா சொத்திற்கான வழிகாட்டி மதிப்பு கணினி நகல் **வா.சா.ஆ.14.** 25.08.2023ம் தேதிய தாவா சொத்திற்கான தீர்வை ரசீதுகள் (பசலி ஆண்டு 1430 முதல் 1433 வரை) அசல் **வா.சா.ஆ.15.** பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லாததால் குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.